# 25.PUZZLE PROBLEMS

1. ஒரு பேருந்துக்கு முன்னால் 4 பேருந்துகள் உள்ளன.ஒரு பேருந்துக்குப் பின்னால் 4 பேருந்துகள் உள்ளன.ஒரு பேருந்து நடுவில் உள்ளது.எனில் மொத்த பேருந்துகள் எத்தனை?

1) 5 2) 6

3) 7 4) 8

2. ஒருசாலையில் மகிழுந்தும்,மிதிவண்டியும் செல்கின்றன. அவற்றின் மொத்த எண்ணிக்கை 50 வருகிறது. மகிழுந்து மற்றும் மிதிவண்டி சக்கரங்களின் எண்ணிக்கை 164 எனில் எத்தனை மிதி வண்டிகள் உள்ளன.

1) 20 2) 24

3) 18 4)16

3. சாரணிய கேப்டன்கள் மற்றும் சாரணியர்கள் உள்ளடங்கிய 1200 பேர் கொண்ட குழு பேரிடர் மீட்பிற்காக தொடர் வண்டியில் செல்கின்றனர். ஒவ்வொரு 19 சாரணியர்களுக்கும் ஒரு சாரணிய கேப்டன் உள்ளனர். எனில் அத்தொடர்வண்டியில் பயணம் செய்யும் சாரணிய கேப்டன்கள் எண்ணிக்கை என்ன?

1) 50 2) 55 3) 75 4) 60

4. பிரியா என்ற அரசுப்பள்ளி மாணவி முதல் நாள் ஆலயத்தில் இறைவனுக்கு ஒரு ரோஜாப்பூ படைக்கின்றாள்.இரண்டாம் நாள் மூன்று மடங்கு ரோஜாப்பூக்களைப் படைக்கின்றாள்,எனில் ஐந்தாம் நாள் இறுதியில் இறைவனுக்கு எத்தனை பூக்களைப் படைத்திருப்பாள் ?

1) 32 2) 81 3) 15 4) 82

5. இராமேஸ்வரத்திலிருந்து சென்னை செல்லும் சேது விரைவு தொடர் வண்டியில் 24 பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளன.ஒவ்வொரு பெட்டியிலும் 90 இருக்கைகள் உள்ளன. இதில் இராமேஸ்வரத்திலிருந்து புறப்படும் போது 50% இருக்கைகள் நிரம்பி

விட்டன. தொடர் வண்டி இராமநாதபுரம் வரும்பொழுது 10% பயணிகளும் திருச்சிராப்பள்ளியில் 7% பயணிகளும் விழுப்புரத்தில் 8% பயணிகளும் வண்டியில் ஏறுகின்றனர். விரைவு வண்டி சென்னை வரும்பொழுது தொடர்வண்டியில் இருக்கும் பயணிகளின் எண்ணிக்கை எத்தனை ?

1) 2100 2) 1620 3) 1720 4) 1800

6. கபீர் என்பவருக்கு 4 மகள்கள் உள்ளனர். ஒவ்வொரு மகளுக்கும் ஒரு சகோதரர் உள்ளார். எனில் கபீருக்கு குறைந்தபட்சம் எத்தனை குழந்தைகள் உள்ளனர்.?

1) 8 2) 4 3) 5 4) 9

7. ஒரு கோபுரத்தில் உள்ள நான்கு மணிகள் முறையே 5,7,3 மற்றும் 12 வினாடிகள் இடைவெளியில் அடிக்கின்றன. அனைத்து மணிகளும் 5 am க்கு ஒன்றாக அடித்தன என்றால், அனைத்து மணிகளும் அடுத்து ஒன்றாக அடிக்கும் நேரம் :

1) 5.10 am 2) 5.15 am
3) 5.07 am 4) 5.08 am

8. ஒரு வேலையாள் நாள் ஒன்றிற்கு ரூ.100 வீதம் சம்பளம் பெறுகிறார். அவர் வேலைக்கு வராமல் உள்ள நாள் ஒன்றிற்கு ரூ.50 வீதம் பிடித்தம் செய்யப்படுகிறது. அவர் 30 நாட்கள் கொண்ட மாதத்தில் ரூ.2400 சம்பளம் பெற்றார். எனில் எத்தனை நாள்கள் அவர் வேலைக்கு வராமல் இருந்திருப்பார் ?

1) 12 2) 8 3) 6 4) 4

9. ஒரு குழுவில் உள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஆறு ஆப்பிள்கள் பகிர்ந்து அளிக்கப்படும் போது ஒரு ஆப்பிள் மீதமுள்ளது. குழுவில் உள்ள ஒவ்வொருவருக்கும் 7ஆப்பிள்களை கொடுக்கும்போது, ஒருவருக்கு மட்டும் ஏதும் கிடைக்கவில்லை. எனில், அக்குழுவில் உள்ள உறுப்பினர்களின்

எண்ணிக்கை ?

1) 8 2) 9

3) 10 4) 12

10. ஒரு சுற்றுலாவில், மாணவர்கள் தங்களுடைய புகைப்படங்களை ஒருவருக்கொருவர் மாற்றிக் கொள்கின்றனர்.அங்கு 45 புகைப்படங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டால், எத்தனை மாணவர்கள் அங்கு இருந்திருப்பார் ?

1) 15 2) 20

3) 9 4) 25

11. ABCD என்ற செவ்வகத்தில் O என்பது ஒரு புள்ளி ஆகும். இப்புள்ளியிலிருந்து செங்குத்து OP,OQ,OR மற்றும் OS ஆகியவை செவ்வகத்தின் பக்கங்களிலிருந்து வரையப்படுகின்றன. OP,OQ,OR மற்றும் OS முறையே 8 செமீ, 12 செமீ, 6 செமீ மற்றும் 10 செமீ ஆக இருந்தால், செவ்வகத்தின் சுற்றளவு என்ன ?

1) 48 செமீ 2) 60 செமீ

3) 72 செமீ 4) 264 செமீ

12. ஒரு குரங்கு 30மீட்டர் உயரமுள்ள கம்பத்தின் உச்சியில் ஏறுகின்றது. ஒவ்வொரு 4மீட்டர் ஏறும்போதும், 2 மீட்டர் சறுக்குகிறது. அது கம்பத்தின் உச்சியை அடைய எத்தனை முறை ஏறும்?

1) 14 2) 15

3)16 4) 18

13. கீழே கொடுக்கப்பட்டுள்ள பெருக்கல் கணக்கில் 'C'-ன் மதிப்பு என்ன?

```
   5 C 7
     2 A
  -------
  1 7 9 B
 1 1 9 4
 --------
 1 3 D 3 1
 --------
```

1) 8 2) 3 3) 7 4) 9

14. இரு எண்கள் உள்ளன. அவற்றுள் பெரிய எண் 9568. அவ்விரு எண்களுக்கிடையேயான வேறுபாடு 145. எனில், மற்றொரு எண் என்ன ?

1) 9413 2) 9421

3) 9423 4) 9123

15. மூன்று கோபுரங்களின் உயரங்களின் விகிதம் 3:5:7.ஒரு சிலந்தியானது 15 நிமிடங்களில் சிறிய கோபுரத்தின் உச்சியை அடைந்தால், பெரிய கோபுரத்தில் ஏற எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்ளும்?

1) 25 நிமிடங்கள்

2) 30 நிமிடங்கள்

3) 35 நிமிடங்கள்

4) 45 நிமிடங்கள்

16. 'REGIONAL' என்ற ஆங்கில வார்த்தையானது அகரவரிசைப்படி எழுதப்பட்டால்,எத்தனை எழுத்துக்கள் தங்களின் நிலையை (Position) தக்க வைத்துக் கொள்ளும்?

1) மூன்று 2)இரண்டு

3) நான்கு 4) ஒன்று

17. "UNIFORMITY"என்ற வார்த்தையில் முதல் மற்றும் ஆறாவது எழுத்தை இடம் மாற்றியும், இதேபோன்று இரண்டாவது மற்றும் ஏழாவது எழுத்தை இடம் மாற்றியமைத்தபின் வலது புற முனையில் இருந்து 4 வதாக அமையும் எழுத்து எது?

1) I 2) U

3) N 4) M

18. A fan always has __________

1) switch 2) current

3) roire 4) blades

19. 1முதல் 50 வரையிலான எண்களில் 4 ஆல் மீதியின்றி வகுபடக்கூடியதாகவும்,4 என்ற எண்ணை

ஓர் எண்ணாகக் கொண்டும் உள்ள எண்கள் எத்தனை?

1) 7 2)10 3) 20 4) 21

20. ஒரு சிறுவன் அவனுடைய சகோதரர்களைவிட இரு மடங்கு சகோதரிகள் இருப்பதாக கூறுகின்றான். அவனுடைய சகோதரி,அவளுடைய சகோதரர்களின் எண்ணிக்கையும் சகோதரிகளின் எண்ணிக்கையும், சமமாக இருப்பதாக கூறுகின்றாள். எனில் எத்தனை சகோதரர்கள்,எத்தனை சகோதரிகள் அங்கு உள்ளனர்.

1) 2 சகோதரர்கள், 2 சகோதரிகள்
2) 2 சகோதரர்கள், 3 சகோதரிகள்
3) 3சகோதரர்கள், 4 சகோதரிகள்
4) 3சகோதரர்கள், 3 சகோதரிகள்